# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 19.4.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய, உயர் கல்வி, தொழிற் கல்வி இரண்டும் இன்றியமையாதவை.

மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வளர்ச்சி அடைந்தால் மட்டுமே, புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சி பெறும். உயர் நிலைக் கல்வியால் தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர் கல்வியே. இத்தகைய உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற் கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பள்ளி படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான கல்லூரிகளை தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்த வகையில், 2011-12 ஆம் ஆண்டில், 11 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று, இந்த ஆண்டிலும் தமிழகத்தில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றை துவக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், செங்கிப்பட்டியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி; மற்றும் தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டம், செட்டிக்கரை ஊராட்சியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி என இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம்; புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை; விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம்; ஈரோடு மாவட்டம் பெருந்துறை; அரியலூர் மாவட்டம் அரியலூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஆகிய 7 இடங்களில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அதாவது Polytechnic Colleges துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சேலம் மாவட்டம் எடப்பாடி; கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி; திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்; ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி; மதுரை மாவட்டம் திருமங்கலம்; திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர்; ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி; திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்; விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை; நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய 11 இடங்களில் புதிதாக பல்கலைக்கழக உறுப்பு இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால் மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவியரின் உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம் கிடைக்கும் உயர் வேலை வாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * * * * * *